13 EDITION
Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2023
MARCH மார்ச் 3 4 5
9.00 மு.ப - 7.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort) முற்றவெளி மைதானம்
இன்று ஆரம்பம்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 97

வெள்ளிக்கிழமை 03 மார்ச் 2023 | மாசி 19 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12

### உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும்

# வர்த்தமானியில் கையொப்பமிடோம்

### தெரிவத்தாட்சி அலுவலர்கள் போர்க்கொடி
### ஆணைக்குழுவுக்குப் புதிய சிக்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 3

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் கையெழுத்திடுவதற்கு 25 மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மறுத்துள்ளனர். »11

## மே மாத இறுதியிலேயே உள்ளூராட்சித் தேர்தல்

### ஏப்ரலில் நிதி வழங்கப்படவேண்டும்
### ஆணைக்குழு இன்று வலியுறுத்தும்

யாழ்ப்பாணம், மார்ச் 3
ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தலை மே மாத இறுதியில் நடத்துவது தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு இன்று விடுக்கும் என்று தெரியவருகிறது. மார்ச் மாதம் 9 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடை »11

## ரூபாவின் பெறுமதி மேலும் உயர்வு!

கொழும்பு, மார்ச் 3
அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின்பெறுமதி நேற்று மேலும் உயர்வடைந்தது. »11



## கழிவுநீர் வெளியேற்றத்தால் வலி.வடக்கு கிணறுகள் பாழ்

### இராணுவத்தினரின் ஈனச்செயல்

யாழ்ப்பாணம், மார்ச் 3
வலிகாமம் வடக்கில் இராணுவத்தினரின் பாவனையில் இருந்து அண்மையில் விடுவிக்கப் »11

முல்லைத்தீவு - குருந்தூர்மலையில்

## அத்துமீறிய கட்டுமானத்துக்காக அறிக்கை கோரியது நீதிமன்றம்

முல்லைத்தீவு, மார்ச் 3
முல்லைத்தீவு - குருந்தூர்மலைப் பகுதியில் நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் நீதிமன்ற அவதானிப்புக்களுக்கு முரணாக அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் தொடர்பில் அறிக்கையிடுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் ஆகியோருக்கு உத்தர »11

நலன்புரி நன்மைகள்

## தகுதியுடைய நபர்களை கண்டறிய கணக்கெடுப்பு

### மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவு

கொழும்பு, மார்ச் 3
நலன்புரி நன்மைகளை வழங்குவதற்கு தகுதியான வர்களைக் கண்டறிவதற்கு தரவுக் கணக் »11

### ஆசிரியரின் தாக்குதலால் மாணவனின் காலில் கிழிவு

## மருமகன் தாக்கி மாமி உயிரிழப்பு

### மனைவி கவலைக்கிடம்
### வவுனியாவில் பயங்கரம்

விரிவுகள்:- பக் - 11 இல்

## யாழ். பல்கலையில் இன்று தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான உள்ளகத் தொழில்சார் பயிற்சிகளை வழங்க முன்வரும் நிறுவனங்களை அடையாளங் »11

## வர்த்தகக் கண்காட்சி ஆரம்பமாகிறது இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 3
வடக்கின் நுழைவாயில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணம் முற்றவெளியில் இன்று ஆரம்பமாகவுள்ளது. »10

## இந்திய மீனவர்கள் அத்துமீறல் கட்டுப்படுத்தத் தொண்டர் படை

யாழ்ப்பாணம், மார்ச் 3
சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு தொண்டர் படையை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. »10

இந்திய இழுவைமடிகள்

## மீண்டும் அத்துமீறல் வலைகள் நாசம்!

### சுழிபுரம் மீனவர்கள் கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 3
வட்டுக்கோட்டை - சுழிபுரம் மேற்கு சவுக்கடி கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளுக் »10

# உள்ளகப் பொறிமுறை ஒருபோதும் தீர்வாகாது

### மனித உரிமைகள் ஆணைக்குழு பொய்யுரைப்பு
### தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3
வடக்கு மக்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உள்ளகப் பொறி [illegible] இணங்கவில்லை. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வடக்கில் நடத்திய கூட்டங்களில் அவ்வாறு [illegible] தெரிவிக்கவில்லை. எல்லோரும் சர்வதேச விசாரணையையே கோரினார்கள். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இவ்வாறு »12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த வாகனத் தரிப்பிட ஒழுங்குகள்

## யாழ். வணிகர் கழகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்.நகரப் பகுதிகளில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு எல்லா வகையான வாகனங்களும் தரிக்கக் கூடிய வகையில் சகல வசதிகளுடன் வாகனத் தரிப்பிடம் ஒன்று நகர அபிவிருத்தி அதிகாரசபையால் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென புதிய ஒழுங்குகள் நடை முறைப்படுத்தப்படவுள்ளன என்று யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:

யாழ்.நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் முறையற்ற விதத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. இதனால் வர்த்தகர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதற்கென நகர அபிவிருத்தி அதிகாரசபையால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தியைத் தாண்டி கொட்டடிக்குச் செல்லும் பக்கமாக சுமார் 100 மீற்றர் அளவில் இடதுபக்கம் சகல வாகனங்களும் தரிக்கக் கூடிய இடவசதிகளைக் கொண்ட வாகனத் தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தரிக்கப்படும் சகல வாகனங்களுக்கும் கட்டணங்கள் அறவிடப்படும்.

சைக்கிள், மோட்டார் சைக்கிள்களுக்கு முதல் ஒருமணிநேரத்துக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. மேலதிக 3 மணித்தியாலயங்களுக்கு 30 ரூபாவும் 3 மணிநேரத்துக்கு மேலதிக ஒவ்வோர் 3 மணிநேரத்துக்கும் 50 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

முச்சக்கர வண்டிகளுக்கு முதல் ஒருமணிநேரத்துக்கு கட்டணம் இல்லை. அடுத்த 3 மணிநேரத்துக்கு 50 ரூபாவும் மேலதிக ஒவ்வொரு 3 மணிநேரத்துக்கும் 100 ரூபாவும் அறவிடப்படும்.

கார், வான் ஆகிய வாகனங்களுக்கு முதல் ஒருமணிநேரத்துக்கு 100 ரூபா அறவிடப்படும். 3 மணிநேரத்துக்கு 150 ரூபாவும் மேலதிக ஒவ்வொரு 3 மணிநேரத்துக்கு 300 ரூபாவும் அறவிடப்படும்.

லொறி, அல்லது பஸ்களுக்கு முதல் ஒரு மணிநேரத்துக்கு 150 ரூபாவும் 3 மணிநேரத்துக்கு 200 ரூபாவும் மேலதிக ஒவ்வொரு 3 மணிநேரத்துக்கு 400 ரூபாவும் அறவிடப்படும்.

வாகனத் தரிப்பிடத்தில் வாகனச் சாரதிகளுக்கான குளியலறை மற்றும் கழிப்பறை வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

நகர்ப்புறத்துக்கு வரும் வாகனங்கள் இந்த வாகனத்தரிப்பிடத்தை பயன்படுத்தி போக்குவரத்து நெரிசல்கள், இடையூறுகளை தவிர்த்துக் கொள்ளவும்.

இந்த வாகனத் தரிப்பிடத்தை கோட்டைப் பகுதியிலிருந்து சிவன் பண்ணை வீதியூடாகவும் ஆஸ்பத்திரி வீதியூடாகவும் பயன்படுத்த முடியும். இந்த ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்கு அனைத்துத் தரப்பினரும் தமது ஒத்துழைப்பை நல்க வேண்டும் - என்றுள்ளது. (ச)

# சிவராத்திரியில் வாள்வெட்டு பிரதான சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 3

சிவராத்திரி தினத்தன்று நல்லூர் பின் வீதியில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவரான சந்தேகநபர் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் நேற்றுமுன்தினம் புதன் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சிவராத்திரி தினத்தன்று அதிகாலை வேளை நல்லூர் பின் வீதியில் வன்முறைக்குழுவால் வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும் பிரதான சந்தேகநபர் தலைமறைவாகி இருந்த நிலையில், யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான அணியால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் 27 வயதுடையவராவார். அத்துடன் அவரிடமிருந்து தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாளும் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14.125)



பிரிட்டன் வெளிவிவகார துணைப் பணிப்பாளர் ஸாரா ஹல்டன் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்து பல தரப்பினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார். (ஒ-5)

### ராஜீவ்காந்தி வழக்கில்

# விடுதலையான நால்வரும் தொடர்ந்தும் முகாம்களில்

சென்னை, மார்ச் 3

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட நான்கு இலங்கையர்களும், விடுவிக்கப்பட்டு நான்கு மாதங்கள் கடந்த போதும் தொடர்ந்தும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இலங்கைக்கு மீளத் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்த, சாந்தனின் ஆவணங்கள் மீதான பரிசீலனை தொடர்ந்தும் நிலுவையில் உள்ளது என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் இந்திய உயர் நீதிமன்றில் தண்டனை உறுதி செய்யப்பட்ட 7 பேரில் பேரறிவாளன் கடந்த ஆண்டு மே மாதம் விடுவிக்கப்பட்டார். நளினி, சாந்தன், முருகன், ரொபர்ட் பயஸ் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் இந்த வழக்கில் இருந்து கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உயர் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டனர்.

வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்ட முருகன், சாந்தன், ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகிய நான்கு இலங்கையர்களும் இந்தியாவில் இருந்து வெளியேறுவது தொடர்பான இந்திய அரசாங்கத்தின் முடிவு நிலுவையில் உள்ளதால் அவர்கள் தொடர்ந்தும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் நால்வரில் மூவர், ஐரோப்பிய நாடுகளில் தங்களது உறவினர்கள் வசிப்பதால் அந்த நாடுகளுக்கு செல்வதற்கு இணக்கம் வெளியிட்டனர்.

சாந்தன் மாத்திரம் இலங்கை திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்த நிலையில், அவரது ஆவணங்கள் மீதான பரிசீலனையும் தொடர்ந்தும் நிலுவையில் உள்ளதால் அவர் நாடு திரும்புவதில் தாமதமாகும் என திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# உடற்பருமன் பாதிப்பு நாட்டில் அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 3

நாட்டில் உடற்பருமனால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என மருத்துவ நிபுணரான சாந்தி குணவர்த்தன தெரிவித்துள்ளார். நாட்டின் சனத்தொகையில் 15 சதவீத பெண்களும் 6.3 சதவீத ஆண்களும் உடற்பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ஆண் மற்றும் பெண் இருபாலாரிடையே உடற்பருமனில் தற்போது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டின் 24.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் அது 30 சதவீதமாக அதிகரித்துள்ளது.

உடல் நிறை குறியீட்டெண் அடிப்படையில் உலக சுகாதார அமைப்பின் புள்ளிவிவரங்களின்படி, ஆரோக்கியமான ஒருவரின் உடல் பருமன் கணக்கீடு 18.5 முதல் 24.9 வரை இருக்கவேண்டும் என்று மருத்துவ நிபுணரான சாந்தி குணவர்த்தன மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# பெரிய வெங்காயத்தின் விலை புறக்கோட்டையில் வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 3

புறக்கோட்டை மொத்தச் சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது என அத்தியாவசிய பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அதன்படி, பெரிய வெங்காயம் கிலோவொன்றின் மொத்த விலை 95 ரூபாவாகக் காணப்படுகிறது. கடந்தவாரம் பெரிய வெங்காயம் கிலோ ஒன்றின் மொத்த விலை 130 ரூபாவாகக் காணப்பட்டது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு விலையும் சரிந்துள்ளது. கடந்தவாரம் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட உருளைக்கிழங்கு தற்போது கிலோ 130 ரூபாவாகக் குறைவடைந்துள்ளது. வெள்ளைச் சீனி கிலோவொன்றின் மொத்த விலை 220 ரூபாவாகக் காணப்படுகிறது என அந்தச் சங்கம் மேலும் குறிப்பிட்டது. (ச-இ)

# தேர்தல் விழிப்புணர்வு; வவுனியாவில் வீதி நாடகம்

வவுனியா, மார்ச் 3

தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு வீதிநாடகம், வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் ஏற்பாட்டில் வீதி நாடகம் இடம்பெற்றது. தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் புதிய சட்டமூலம் தொடர்பான முழுமையான உள்ளடக்[illegible] தெளிவுபடுத்தப்பட்டது. [illegible] பிரசுரங்களும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (ஒ-14.110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவில் அரசியல் பேச்சு வார்த்தை வடக்கு மீனவர்களுக்கு தொடர்பில்லை

## ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 3

வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கதைப்பதற்கு மீனவ பிரதிநிதிகளே சம்பந்தப்படவேண்டுமே தவிர மாறாக அரசியல் கட்சியின் பிரதிநிதிகளோ அல்லது எந்த அரசியல் கட்சியுமோ பேச்சில் ஈடுபட முடியாது. கச்சதீவில் இந்திய – இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பாக பேச்சு இடம்பெற்றால் அதற்கும் வடக்கு மீனவர்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை.

இவ்வாறு ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கச்சதீவு பெருவிழாவில் பேச்சுக்கள் இடம்பெறுமா என்று வினவப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவின்போது மீனவர் பேச்சுக்கள் என்ற பெயரில் அரசியல் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன. வடக்கு மீனவர்களுடன் தொடர்பில்லாத சிலரை கச்சதீவுக்கு அழைத்துச் சென்று இந்திய மீனவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

வடக்கில் அரசின் பக்கம் நின்று செயற்படும் அரசியல் கட்சி ஒன்று இதற்கென ஆட்களைத் திரட்டி வருகின்றது.

இந்திய இழுவை மடிப் படகுகளால் அதிகளவு பாதிப்படைந்து நஷ்டத்தை எதிர்நோக்குவது வடக்கு கடற்றொழிலாளர்களாகிய நாமே. மீனவப் பிரதிநிதிகள் இன்றி கலந்துரையாடல் இடம்பெறுவதை ஏற்கமுடியாது.

வடக்குக் கடலானது ஒரு கட்சி அல்லது அரசியல் தரப்புக்கு உரியதொன்றல்ல. தம்முடைய அரசியல் இலாபங்களுக்காக இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்திய மீனவர்களினுடைய அத்துமீறல்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சுடன் மேற்கொள்ளும் பேச்சின் மூலமே எமக்குரிய தீர்வுகளைப் பெறலாம். கச்சதீவில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பேச்சுகளிலும் நாம் ஈடுபடோம். அந்தப் பேச்சுகளுடன் எமக்குத் தொடர்பில்லை. கச்சதீவில் மதம் சார்ந்த நிகழ்வுகள் தவிர்ந்த ஏனையவற்றை அனுமதிக்கக் கூடாது - என்றார். (ச-125)

# தமிழக மீனவர்களின் 4 படகுகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கையகப்படுத்தப்பட்டிருந்த தமிழக மீனவர்களின் 4 படகுகள் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளன. பராமரிப்புச் செலவைச் செலுத்தி அவர்கள் படகுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று ஊர்காவற்றுறை நீதிமன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கையகப்படுத்தப்பட்டிருந்த தமிழக மீனவர்களின் படகுகள் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில், 4 படகுகள் விடுவிக்கப்பட்டன. 4 படகுகள் அரசுடைமையாக்கப்பட்டன. இரு படகுகளுக்கான வழக்கு எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது. இலங்கைக் கடற்பரப்பில் வைத்து பராமரிக்கப்பட்ட பராமரிப்புச் செலவாக ஒரு படகுக்கு ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 500 ரூபாவும், இரண்டாவது படகுக்கு 54 ஆயிரத்து 500 ரூபாவும், மூன்றாம் மற்றும் நான்காம் படகுகளுக்குத் தலா 14 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும் என்று நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வழக்குத் தொடுநர் மற்றும் எதிராளிகள் கட்டளை தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் மேன்முறையீடு செய்ய முடியும் எனவும் மன்று பரிந்துரைத்தது.

மேன்முறையீடு செய்யப்படின் மேன்முறையீட்டுக் காலம்வரையில் படகுகளை எடுத்துச் செல்ல முடியாது என்றும், மேன்முறையீட்டின் பின்னர் படகை எடுத்துச் செல்ல முடியும் என்றும் நீதிமன்று கட்டளை பிறப்பித்தது. (எ-26,20)

### மதுபோதையில்

# இராணுவத்தினருடன் சேட்டை இளைஞர்கள் இருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 3

கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட இராணுவத்தினரின் கடமைகளுக்கு, போதையில் இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் சந்தியில் உள்ள இராணுவமுகாமில் கடமைபுரியும் இராணுவத்தினரின் கடமைக்கு இடையூறு செய்தமைக்காக அவர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதான இளைஞர்கள் நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-26,125)

# விகாரைக்குச் சென்ற சிறுமி வன்புணர்வு

## பிக்கு அடித்துக் கொலை

கொழும்பு, மார்ச் 3

விகாரைக்கு வழிபடச் சென்ற சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த பிக்கு ஒருவர் சிறுமியின் உறவினர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் ஹெட்டிப்பொல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினர்களே பிக்குவைத் தாக்கியுள்ளனர்.

படுகாயமடைந்த பிக்கு குருநாக்கல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் ஹெட்டிப்பொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



# முத்திரையற்ற அளவைக் கருவிகள் 11 வியாபாரிகளுக்கு சட்டநடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 3

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளைப் பயன்படுத்தி விற்பனையில் ஈடுபட்ட 11 வியாபாரிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் பண்ணை மீன்சந்தை, நாவாந்துறை மீன்சந்தை, காக்கைதீவு, சின்னக்கடை மீன்சந்தை ஆகிய இடங்களில் திடீர் பரிசோதனை நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

அதன்போது வியாபாரிகளால் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளை உத்தியோகத்தர்கள் பரிசோதித்தபோது, அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளைப் பயன்படுத்தி விற்பனையில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அதனையடுத்தே 11 வியாபாரிகளுக்கு எதிராக உத்தியோகத்தர்களால் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் இனிவரும் காலங்களில் நிறுவை அல்லது அளவை உபகரணங்களை வியாபார நோக்கத்துக்காகப் பயன்படுத்தும் வியாபார நிலையங்களிலும் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்பதால் வர்த்தகர்கள் அனைவரும் நுகர்வோருக்கு நம்பகரமான சேவையை வழங்க முன்வரவேண்டும் என்றும் அறிவித்துள்ளனர். (ஒ-14,26)

# பஸ் நடத்துநர் மீது தாக்குதல்

சாவகச்சேரி பகுதியில் தனியார் சொகுசு பஸ் நடத்துநர் ஒருவர் மீது நேற்றுமுன்தினம் புதன்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் தனியார் சொகுசு பஸ்ஸில் முற்பதிவு செய்தவர்களுக்கு மேலதிகமாகப் பயணிகளை ஏற்ற முற்பட்டனர்.

அவ்வேளை பின்னால் வந்த யாழ்ப்பாணம் -கொழும்பு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸின் நடத்துநர், பஸ்ஸை நிறுத்தி சொகுசு பஸ் நடத்துநருடன் தர்க்கத்தில் ஈடுபட்டார். அதன்விளைவாகவே நடத்துநர் தாக்கப்பட்டார். அதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஒ-14,159)

# கைவிடப்பட்ட நிலையில் வீட்டுக்கு முன் மோ.சைக்கிள்



யாழ்ப்பாணம், மார்ச். 3

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி மேற்குப் பகுதியில் வீடு ஒன்றுக்கு முன்னால் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர் காலை வெளியே வந்து பார்த்தபோது, வீட்டுக்கு முன்னால் மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தப்பட்டிருந்ததை அவதானித்தார்.

மோட்டார் சைக்கிளின் சில பாகங்கள் கழற்றி எடுக்கப்பட்ட நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து வீட்டின் உரிமையாளரால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

13 EDITION

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

# JAFFNA INTERNATIONAL TRADE FAIR

JITF 2023

MARCH 3rd 4th 5th மார்ச்

9.00 மு.ப - 7.00 பி.ப

Concurrently with Higher Education & Career Exhibition

KALVI JAFFNA 2023

Muttraweli Grounds (Next to Jaffna Fort) முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

# இன்று ஆரம்பம்



## Message from

Managing Director

Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

It is with great pleasure that I extend this message for the 13th Jaffna International Trade Fair (JITF). We at Lanka Exhibition & Conferences Services (Pvt) Ltd, as the organizer of this mega event are, very confident that exhibitions of this nature will create a gateway to facilitate trade in the north for the business community in Sri Lanka to meet the potential entrepreneurs and investors.

Jaffna is a region in the northern part of Sri Lanka that has faced many challenges over the years. However, in recent times, there have been significant efforts to develop the area, and now we can see the gradual development and potential investment opportunities in the region. Such as infrastructure development, renewable energy projects, agriculture, and tourism etc. As per the statistics there is a significant increase of the visitors to the exhibition year on year which clearly indicates that the northern population has increased as a result of the environment being conducive for people to live with the rapid development, of infrastructure in the north and east streamlining the living conditions of the northern community.

I take this opportunity to thank all government personnel and organizations who have been very supportive towards making this event a reality. I also wish to express my sincere thanks for the continuous support of this trade exhibition to the Chamber of Commerce & Industries of Yarlpanam, Sponsors, Exhibitors and participants. Your dedication to excellence and innovation is truly inspiring. I encourage all the visitors to take full advantage of the opportunities presented here. Make new contacts, discover new products and services, and the numerous possibilities that exist by way of this event and thank them for the continued support in making JITF a great success year after year.

Finally, I wish you all a successful and productive trade fair. May this event be a stepping stone towards greater prosperity, economic sustainability, and collaboration in the years ahead.

*Arjun Dharmadasa*



## Message from

Chief Executive Officer

Lanka Exhibition & Conference Services (Pvt.) Ltd.

The Northern most tip of the country, its capital will be set alight for the 13th consecutive year with the commencement of the Jaffna International Trade Fair (JITF) 2023 from the 3rd to the 5th of March 2023. The Exhibition which has risen to a 'must attend' event by the citizens, businessmen, traders and entrepreneurs of the North will be held at the Muttraweli Grounds Jaffna, at the heart of the peninsula.

The trade fair which comprises all types of industry stalls, caters to a diverse variety of needs and services and has been considered the single most focal point for a wide spectrum of businesses, investors and citizens.

Organizing the 13th edition of JITF ensures that the northern region is still one of Sri Lanka's prime untapped markets in terms of trade and investment. This event undoubtedly is considered the most focused exhibition and Trade Fair in Jaffna.

I take this opportunity to welcome all exhibitors, delegates and visitors to Jaffna while thanking and wishing all our valued sponsors and exhibitors the very best at JITF.

I also wish to convey my sincere thanks and gratitude to all stakeholders who have supported us immensely in making this year's JITF a success.

*Aasim Mukthar*



## Message from

Chairman

Chamber of Commerce and Industries of Yarlpanam

The day has dawn at last to welcome the much – expected Jaffna International Trade Fair (JITF) from 3 to 5 March 2023. It is a great pleasure to present the Chairman's message to this wonderful event. All of you are aware about the chamber of commerce and Industries Yarlpanam have taken a first step to outspread numerous positive and excellent impacts on the Northern Province industrial activities notably during this economic crisis condition.

The 13th JITF with the excellent cooperation of LECS - Lanka Exhibition and Conference Services (PVT) Ltd. has come out in a great manner as you could see. The trade show having the motto of "Gate way to Jaffna" depicts the open economy and enable local producers, nationally and internationally and brings in technical talents and skills from outside the peninsula to benefit the whole entrepreneurs in the Northern region. JITF regularly maps the most lucrative opportunities across the national market landscape in target sectors and promote our region's existing and new business through participation in trade shows, buyer –seller meets, international collaboration/ investment opportunities and networking arrangements through overseas missions, trade & investment promotion bodies across the territory.

Our gratitude to the exhibition organizers Lanka exhibition and Conference services (PVT) Ltd for their dedication and inception of the event, and CCIY for all those who have made this event a success. We are grateful for the complete support and guidance received from Hon Governor of Northern Province, the Archaeological Department, the Major and Commissioner of Jaffna Municipal Council, the District Secretary and the government officials, Police and Armed forces to have given the needful security. It is our warmest thanks to all the donors who facilitated to make a successful and memorable event, the exhibitors who accepted all pains to come forward even during this crisis situation and public for their wonderful cooperation and encouragements.

CCIY hopes that the JITF 2023 would leave a great memory in the minds of all peace-promoting citizens in the country and best wishes for gradual growth of industries in the Northern region that open up new employment opportunities.

*V.K.Vignesh*



## Message from

Group Marketing Manager

Tokyo Cement Company (Lanka) PLC

TOKYO CEMENT GROUP is excited to be the Main Sponsor of this year's Jaffna International Trade Fair (JITF). We believe this much-anticipated calendar event, which focuses the spotlight on the business potential of not just Jaffna but the entire Northern region, is a great platform for us to reconnect with our loyal customers.

This year, the JITF comes to Jaffna at an opportune time as the region promises remarkable growth, with many businesses and individuals eagerly awaiting to revive their development aspirations that were kept on hold during the last couple of years. As such, we anticipate this year's Trade Fair to open new prospects for market growth, whereby TOKYO CEMENT looks forward to build upon the trust and reliability we have earned for more than four decades, as the Leading Partner in Nation-building.

Being the country's largest manufacturer of cement, concrete and cement-based value-added products, TOKYO CEMENT GROUP proudly hosts the complete range of construction solutions that guarantee consistent quality and reliability. The JITF provides an opportunity for visitors to witness and learn about these products that are proven to save time and money spent on a building project from the foundations to the finishes.

Whilst congratulating the organizers, I take this opportunity to wish resounding success to all participants at the Jaffna International Trade Fair 2023!

*Dashantha Udawatte*

MAIN SPONSOR: TOKYO CEMENT GROUP

CO SPONSOR: Maliban Inspiring Goodness

ORGANIZED BY: LECS LANKA EXHIBITION

IN ASSOCIATION WITH: CCIY

OFFICIAL PARTNERS

SNACK | SPICE | ILLUMINATION | HYGIENE | T-SHIRT | PRINT MEDIA | EDUCATION | TYRE | RENEWABLE ENERGY | RIDING

NorthernUNI | AROMA | Hayleys Solar | LUMALA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அறிக்கையில் புதைந்திருக்கும் அபத்தம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடக்குப் பயணம் தொடர்பான அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ள சில விடயங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் கரிசனை செலுத்தவேண்டியுள்ளது. இந்த நாட்டில் நடைபெற்ற போருக்கான காரண காரியங்கள் கண்டறியப்பட்டு அவை சீர்செய்யப்படாது பூசி மெழுகப்படுவதானது ஆபத்தானது. அது மீண்டும் ஒருமுறை போரை உருவாக்குவதற்கு ஏதுவாகிவிடும். அவ்வாறானதொரு ஆபத்தான காரியத்தையே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு செய்திருக்கின்றது.

*'பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதில் சர்வதேசப் பொறிமுறையொன்றை ஆதரிக்கும் தரப்பினர், அரசாங்கத்தின் எத்தகைய கட்டுப்பாடுமின்றி பாதிக்கப்பட்ட தரப்பினரின் பிரதிநிதித்துவத்துடன் செயற்றிறன்மிக்க, நேர்மையான உறுப்பினர்களை உள்ளடக்கி நிறுவப்படக்கூடிய உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு என்ற உள்ளகப் பொறிமுறைக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்'* – என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தால் போர் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரையில் தமிழ் மக்கள் உள்ளகப் பொறிமுறைக்கு இணக்கம் தெரிவிக்கவேயில்லை. ஆணைக்குழு வடக்கு மக்களின் கருத்து என்று பொதுமைப்படுத்தி இவ்வாறானதொரு நிலைப்பாட்டை வெளியிட்டமையானது அபத்தமானது என்பதுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆட்சியாளர்களின் இசைக்கு ஏற்ப ஆடியிருக்கின்றார்கள் என்றே கருதவேண்டியுள்ளது, போரின்போதான பொறுப்புக்கூறல் என்பது முக்கியமானது. இந்த நாட்டில் மீண்டுமொருமுறை இவ்வாறானதொரு கொடூரம் இடம்பெறக்கூடாதென்றால், பொறுப்புக்கூறல் மிகவும் முக்கியமானது. இலங்கையின் ஆட்சியாளர்கள் திரும்பத் திரும்ப உள்ளகப் பொறிமுறையையே வலியுறுத்தி வருகின்றனர். அரசாங்கமே பொறுப்புக்கூறல் செயன்முறைக்கு ஒரு பொறிமுறையை உருவாக்குவது என்பது இயற்கை நீதிக்கு முரணானது. ஏனெனில் போரில் இரு தரப்புக்கள் தொடர்புபட்டுள்ள நிலையில் அதில் ஒரு தரப்பான அரசாங்கம் பொறிமுறையை உருவாக்குவது என்பது கேலிக்கூத்தானது. இதனால்தான் தமிழர் தரப்புக்கள் தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையைக் கோரிநிற்கின்றன.


இலங்கையின் உள்ளகப் பொறிமுறை எப்படியிருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நாட்டில் சிங்கள – பௌத்த ஆட்சியாளர்கள் தங்களை போர் வெற்றி நாயகர்களாக மக்களின் மனதில் இடம் பிடிக்க, படையினரே போர்க்களத்தில் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்பட்டார்கள். எனவே தமது அரசியல் ஆதாயத்துக்காக உழைத்த படையினரை ஆட்சியாளர்கள் ஒரு போதும் கைவிடமாட்டார்கள். அதனால் தான் ''படையினரை எவரும் தண்டிக்க இடமளிக்கோம்'' என்று அதிகாரத் தரப்பினர் சிங்கள மக்களுக்கு வாக்குறுதியளித்து வருகின்றனர். இப்படியான நிலையில் அவர்களால் அமைக்கப்படும் ஒரு பொறிமுறை எப்படிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தை நீதியை வழங்கும்?

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்மட்டக் குழு வடக்குக்கு வருகை தந்தது உண்மைதான். அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட சிலரைச் சந்தித்தார்கள். அந்தத் தெரிவை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுதான் மேற்கொண்டிருந்தது. அப்படியிருக்கையில் அவர்கள் தெரிவு செய்தவர்கள் கூறியதை மட்டும் வைத்து ஒட்டுமொத்த வடக்கு மக்களின் கருத்தாக அதை திரிபுபடுத்தியமை பெரும் அபத்தமானது. 13 ஆண்டுகளாக சர்வதேச விசாரணையே வேண்டும் என்றுதான் தமிழ் மக்கள் வலியுறுத்தி வருகின்றார்கள். இதற்காக பல தடவைகள் போராட்டங்களைக்கூட அவர்கள் செய்திருக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி இன்றும் 2 ஆயிரம் நாள்களைக் கடந்து வீதியோரம் இருந்து போராடும் தாய்மார்கள் கூட சர்வதேச விசாரணைதான் தமக்கான ஒரே தீர்வு என்று திரும்பத் திரும்பக் கூறிவருகின்றனர்.

சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கான அரசாங்கத்தின் கருவியாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்படுவதானது அதன் நம்பகத்தன்மையையே கேள்விக்குறியாக்கும்.

### நாளொரு நல்வார்த்தை

"உன்னுடைய பயம்தான் உன்னை அடிமையாக்குகிறது. பயமற்றவன் யாருக்கும் பயந்தவனில்லை. யாரையும் தனக்குப் பயந்தவனாக ஆக்குவதும் இல்லை" – ஓஷோ




உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பு

## மனிதஉரிமை ஆணைக்குழு விசாரணையை ஆரம்பிக்கும்

கொழும்பு, மார்ச் 3

உள்ளாட்சிசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு விசேட விசாரணைகளை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன - என்று அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன் ஆரம்ப விசாரணைகளுக்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், உள்ளூராட்சி மன்றத்தேர்தல் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்வதன் காரணமாக விசாரணைகளுக்காக வேறொரு திகதியை வழங்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## மின் காற்றாலைகளால் மன்னார் அழியும் நிலை

மன்னார், மார்ச் 3

மன்னார் தீவில் அமைக்கப்பட்டிருக்கும் மின் காற்றாலைகளால் மன்னார் தீவு அழியும் அபாயம் உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுக் கூட்டம், மன்னார் பிரஜைகள் அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை இடம்பெற்றது. அதன்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. பிரதிநிதிகள் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் மின் காற்றாலைகளால் சுற்றாடல் மாத்திரமல்ல பெரும் தொகையான மீனவ சமூகம் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் மன்னார் தீவு அழிவுக்கு உட்படும் அபாயம் தோன்றியுள்ளது என்று தெரிவித்து அன்று முதல் இன்று வரை பலதரப்பட்டவர்களால் மனு வழங்கப்பட்டும் கருத்தமர்வுகள், கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்டும் வருகின்றன.

எனினும் இது தொடர்பில் இதுவரையில் அரசாங்கமும் இதற்குரிய தரப்பினரும் கவனத்திற்கொள்ளாமல், மீண்டும் தொடர்ந்து மன்னார் தீவில் காற்று சக்தி செயற்றிட்டத்தின் முதலாம்கட்ட விரிவாக்கமாக கொள்ளளவை மேம்படுத்துவதற்கான திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களை 30 தினங்களுக்குள் கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மன்னார் தீவிலுள்ள கிராம மக்களுக்கு மின்காற்றாலை தொடர்பான விழிப்புணர்வை உண்டாக்கி இதனால் ஏற்படும் தாக்கங்களை தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடனே மேற்கொள்ளப்படும் - என்றனர். (ஒ-14.60)

நாளை

04.03.2023
சனிக்கிழமை
மாசி 20

சுபநேரம் : 03.26 - 04.56
ராகுகாலம் : 09.26 - 10.56
சனிப்பிரதோஷவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்கட்டண அதிகரிப்பால்

# பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிப்பு

கிளிநொச்சி, மார்ச் 3

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மின்கட்டண அதிகரிப்பானது தமது வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் பல்வேறு சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்கின்றோம். அதிலும் குறிப்பாகப் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். தையல் தொழில் மூலம் எமக்கு மாதாந்த வருமானம் 5 ஆயிரம் ரூபா. ஆனால் தற்போதைய மின்கட்டணம் 3 ஆயிரத்து550 ரூபா.

இதற்கிடையில் பிள்ளைகளின் பாடசாலைப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாவுக்கு மேல் தேவைப்படுகின்றது. 150 ரூபா விற்பனை செய்யப்பட்ட கொப்பி இன்று 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் அனைத்துப் பொருள்களின் விலைகள் அதிகரித்து சிக்கித் தவிக்கும் நிலையில் தற்போதைய மின்கட்டண அதிகரிப்பும் எமது வாழ்வாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பிள்ளைகளைக் கற்பிக்க முடியாத அளவுக்கு பொருளாதாரமும் வரியும் தாக்கம் செலுத்துகின்றது.

போட்டியின் மத்தியில் சந்தையில் எமது உற்பத்திகளைக் கொண்டு செல்கின்றோம். தற்பொழுது மின்சாரம் உள்ளிட்ட அதிகரிப்பு காரணமாக சந்தைப்படுத்தமுடியவில்லை. கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் எமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு பகுதிகளில் பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் நாம், எமது வாழ்வாதாரத்தைத் தொலைக்கப்போகின்றோம் என்ற எண்ணமும் உருவாகிவிட்டது.

எனவே எம்மைப் போன்ற சுயதொழில் முயற்சியாளர்களுக்கு மின்கட்டண கழிவை அரசாங்கம் அறிமுகம்செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஒ-14-113)

## பணம் செலுத்தி ஒரு வருடம் கடந்தும் மின்னிணைப்பு வழங்கப்படவில்லை

### பொருளாதார நெருக்கடியே காரணம் என மின்சாரசபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

மின்னிணைப்புக்காகப் பணம் செலுத்தி ஒரு வருடத்துக்கு மேலாகியும் இதுவரை இணைப்பு வழங்கப்படவில்லை. மின்சாரசபை அலுவலகத்தில் செலுத்திய தமது பணத்தை வட்டியுடன் மீள வழங்குமாறு பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் குடியிருப்புகள் மற்றும் வர்த்தக நிலையங்கள், மத நிறுவனங்கள் போன்றவற்றுக்கு மின் இணைப்புக்கு விண்ணப்பித்திருந்தனர். மின்சாரசபை அலுவலர்கள் நிலையங்கள், குடியிருப்புக்களைப் பார்வையிட்டு அதற்குரிய தொகையை செலுத்துமாறு அறிவித்ததையடுத்து உரிய தொகையை உரியவர்கள் செலுத்தியுள்ளனர். எனினும் மின்னிணைப்பு வழங்கவில்லை.

மின்னிணைப்பு வழங்கக்கோரி மின்சாரசபை அலுவலகங்களுக்குச் சென்று கேட்டால் இணைப்புக்கான மீற்றர் பெட்டி மற்றும் இணைப்பு வயர் இன்னும் வந்து சேரவில்லை. கிடைத்ததும் இணைப்பு வழங்கப்படுமெனத் தெரிவிக்கின்றனர்.

பணம் செலுத்தி ஒரு வருடத்துக்கு மேலாகியும் மின்னிணைப்பு வழங்கப்படாததால் தாம் செலுத்திய தொகையை வட்டியுடன் மீள வழங்குமாறு உரியவர்கள் கோரி வருகின்றனர்.

இது தொடர்பாக மின்சாரசபையுடன் தொடர்பு கொண்ட போது கடந்த 2022ஆம் ஆண்டு தொடக்கம் மின்சாரம் பெற பணம் செலுத்தி மின் இணைப்பு வழங்காதோரின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. பொருளாதார நெருக்கடி காரணமாக இணைப்பு வழங்குவதற்கான பொருள்கள் இறக்குமதி செய்யப்படவில்லை. பொருள்கள் கிடைத்ததும் மின்னிணைப்பு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-9)

## அராலிப் பகுதியில் மோட்டார் ஷெல் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி பகுதியில் மோட்டார் ஷெல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அராலி நொச்சிகாட்டு வீதியிலுள்ள காணியொன்றில் துப்புரவுப்பணி முன்னெடுக்கப்பட்ட வேளை, சந்தேகத்துக்கிடமான பொருளொன்றை உரிமையாளர் அவதானித்தார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட பொருளை, 60 மில்லிமீற்றர் மோட்டார் ஷெல் என இனங்கண்டு மீட்டனர். (ஒ-14-125)

## மோட்டர் திருட்டு நபர் மடக்கிப்பிடிப்பு

மன்னார், மார்ச் 3

நானாட்டான் பிரதேசத்தில் பல வீடுகளில் தொடர்ச்சியாக நீர் இறைக்கும் இயந்திரம் திருடி வந்த நபரை பொலிஸார் உதவியுடன் பொதுமக்கள் நேற்றுமுன்தினம் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள சில கிராமங்களில் தொடர்ச்சியாக நீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டு வந்தது. அந்தப்பகுதி மக்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தையடுத்து அருவி ஆற்றங்கரையில் உள்ள தோட்டம் செய்யும் காணியை சோதனை செய்தபோது, அங்கு திருடப்பட்ட மோட்டர்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதனையடுத்து முருங்கன் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய, இராசமடு அருவியாற்றங்கரையில் வசிக்கும் 39 வயது மதிக்கத்தக்க நபரொருவர் கைது செய்யப்பட்டார். அத்துடன் அவரிடமிருந்து மூன்று மோட்டர்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14-213)

## மட்டுவில், நுணாவில்

# உணவு நிலையங்களில் திடீர் சோதனை

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மட்டுவில், நுணாவில் ஆகிய இடங்களில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் பலசரக்குக் கடைகள் போன்றவற்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திடீர் சோதனைகளை நடத்தினர்.

சோதனையின்போது சுகாதாரத்துக்குப் பொருத்தமற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் பறிமுதல் செய்ய முற்பட்ட வேளையில், உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களால் அவை அழிக்கப்பட்டன.

சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் காணப்பட்ட நிலையங்கள் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டது. அதனையடுத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாக உரிமையாளர்கள் உறுதியளித்ததுடன் குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை நிலையங்களை மூடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் 3 பலசரக்கு விற்பனை நிலையங்களில் திகதி காலாவதியான பொருள்கள் சுகாதாரப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டதுடன் வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-9)

# மாநகரசபை உட்கட்சிப் பூசலை மறைக்கவே எம்மீது சேறுபூசல்!

## யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறைத் தலைவர் ஆதங்கம்

யாழ்ப்பாண மாநகரசபையில் இடம்பெறும் சுயலாப அரசியல் மற்றும் குழப்ப நிலைமைகள் ஆகியவற்றை மூடிமறைக்கவே வர்த்தக கண்காட்சி நடத்துபவர்கள் வரி செலுத்தவில்லை என எம் மீது பழிசுமத்தி கவனத்தை திசை திருப்பப்பட்டுள்ளது என யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றத் தலைவர் கு. விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடங்களில் இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சிகளின்போது எம்மால் மாநகரசபைக்கு செலுத்த வேண்டிய பணம் செலுத்தப்படவில்லை என சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டது. நாம் செலுத்த வேண்டிய தொகை உள்ளிட்ட விவரங்களை எமக்கு உத்தியோகபூர்வமாக கடந்த 17ஆம் திகதியே அறிவித்தனர். ஆனால் அதற்கு முன்பதாக நாம் பணம் செலுத்தவில்லை என 15ஆம் திகதியே ஊடகங்களுக்கு தெரியப்படுத்தி செய்தியிடப்பட்டுள்ளது. நீண்டகாலமாக நாம் மாநகரசபைக்கு பணம் செலுத்தவில்லை என எம்மீது குற்றம் சுமத்தும் அவர்கள் ஏன் சட்டநடவடிக்கை எடுக்கவில்லை? வர்த்தகக் கண்காட்சியின்போது, விற்கப்படும் தலா ஒவ்வொரு நுழைவுச்சீட்டுக்கும் 12 வீத வரி செலுத்துகிறோம். அதுமட்டுமன்றி காட்சிக் கூடங்களுக்கும் வரி செலுத்துகிறோம்.

மாநகரசபையின் உறுப்பினர்கள் சிலர் தமது அரசியல் சுயஇலாபத்துக்காகவும் மாநகரசபையில் அண்மைக்காலமாக காணப்படும் குழப்ப நிலைமைகள் குறித்த செய்திகளை திசை திருப்பவே எம்மீது சேறு பூசியுள்ளனர். இது யாழ்.மாநகரசபையின் அநாகரிகமான செயலாகும். இதேவேளை இந்த வருடத்துக்கான வர்த்தகக் கண்காட்சி இன்று ஆரம்பமாகி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது. இம்முறை நுழைவுக்கட்டணமாக 100 ரூபா அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு அனுமதி இலவசம் - என்றார். (ச-20-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக குடிதண்ணீர் தினம்:

# மாணவர்களிடையே சுவரொட்டிப் போட்டி

உலக குடிதண்ணீர் தினத்தை முன்னிட்டு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை யால் பாடசாலை மாணவர்களிடையே சுவ ரொட்டிப் போட்டி நடத்தப்படவுள்ளது.

'நீர் மற்றும் சுகாதார நெருக்கடியைத் தீர்ப்ப தற்கான மாற்றத்தை துரிதப்படுத்துவதாகும்' எனும் கருப்பொருளில் மாணவர்களிடம் ஆக் கங்கள் கோரப்பட்டுள்ளன.

4 பிரிவுகளாக நடத்தப்படும் இந்தப் போட் டியில் பிரிவு ஒன்றில் தரம் 3 தொடக்கம் 5 வரையும், பிரிவு 2 இல் தரம் 6 தொடக்கம் 9 வரையும், பிரிவு 3 இல் தரம் 10 தொடக்கம் 11 வகுப்புகளுக்கும், பிரிவு 4 இல் உயர்தரமும் உள்ளக்கடப்படுகின்றன.

சுவரொட்டி ஆக்கங்கள், ஏ-4 அளவுத்திட் டத்தில் கணினிசார் தொழில்நுட்பங்களின் பாவனையின்றி அதிபரால் அல்லது பொறுப் புவாய்ந்த அலுவலர்களால் உறுதிப்படுத்தப் பட்டு மாணவர் பெயர், தரம், பாடசாலை என் பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

ஆக்கங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னராக பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம், பிராந்திய சேவைகள் நிலை யம், வடக்கு தேசிய நீர் வழங்கல், வடிகால மைப்புச்சபை, வவுனியா அல்லது தங்கள் பிரதேசத்திலுள்ள தேசிய நீர் வழங்கல் வடிகா லமைப்புச்சபையில் நேரடியாகவோ அல்லது dgm.section@gmail.com மின்னஞ்சல் முக வரிக்கோ அனுப்பி வைக்கமுடியும் என அறி விக்கப்பட்டுள்ளது. (ச-214)

# தென்மராட்சிக் கல்வி வலய ஏழிசை மாலை நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 3

கொரோனா அச்சம் காரணமாக நிறுத்தப்பட் டிருந்த தென்மராட்சிக் கல்வி வலய ஏழிசை மாலை நிகழ்வு மீண்டும் இன்று வெள்ளிக்கி ழமை ஆரம்பமாகவுள்ளது.

அதற்கமைய கைதடிப் பிரதேச பாடசாலை களின் இசையாசிரியர்கள், மாணவர்களின் ஏழிசை மாலை நிகழ்வு, இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தேவ ஈஸ்வரன் தலைமை யில் நடைபெறவுள்ள நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராச துரை கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14-9)

# கௌரவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 3

சாவகச்சேரி - போக்கட்டி அ.த.க. பாடசாலை யின் புலமைப்பரிசில் சாதனையாளர் கௌர விப்பு, இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெ றவுள்ள நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி தாபனம் மற்றும் பொது முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப் பாளர் செல்வி அபிராமி இராஜ துரை கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-14-159)

# மரண அறிவித்தல்



## மார்க்கண்டு அழகதுரை

மலர்வு 06.10.1952 உதிர்வு 01.03.2023

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு அழகதுரை கடந்த (01.03.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னப்பிள்ளை (அன்னம்)யின் கணவரும், காலஞ்சென்றவர்களான பூமணி, கண்மணி, சரஸ்வதி மற்றும் விபுலானந்தம், குணசிங்கம் ஆகியோரின் சகோதரனும், பிரதீபன் (லண்டன்), காண்டீபன் (கனடா), மேனகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கவிலா, குமரகுருபரன் (குமரன் - ஆசிரியர்) ஆகியோ ரின் மாமனாரும், அபிதன், அத்விகா, கனியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் த்கனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/23792) 4.6

# மரண அறிவித்தல்

மலர்வு 27 • 05 • 1956

உதிர்வு 28 • 02 • 2023



## சிவகுரு தங்கராசா

சாவகச்சேரி வடக்கு மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு தங்கராசா கடந்த (28.02.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு நல்லம்மா தம்பதியரின் புதல்வனும், வளர்மதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இந்திரன் மற்றும் சோமசுந்தரம், குலேந்திரன் ஆகியோரின் சகோதரரும், மயூரன் (சுவிஸ்), கேமா (பிரான்ஸ்), றமா (லண்டன்) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், நந்தினி, குமரன், ஜெகநாத் ஆகியோரின் மாமனா ரும், சைரா, யரோன், சந்தோஷ், மல்வன், ஓவியன், நிபிஷா, கௌதமன், அன்சனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு,
மடத்தடி.

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 • 12 • 1937

பிறப்பு 01 • 03 • 2023



## வடிவம்மா மார்க்கண்டு

பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், லோட்டன் வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வடிவம்மா மார்க்கண்டு அவர்கள் கடந்த (01.03.2023) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா பொன்னி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா இலட்சுமி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு (ஸ்ரீமுருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகள்) அவர்களின் மனைவியும், ரஞ்சினிதேவி (ஜேர்மனி), மனோகரன் (முன்னாள் உரிமையாளர், ஞானம்ஸ் பார்மசி-மானிப்பாய்), ஜமுனாதேவி (ஜேர்மனி), சிறீகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், தர்மசீலன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஞானேஸ்வரி (இலங்கை), சத்தியசீலன் (ஜேர்மனி), கௌசி (பிரான்ஸ்), றோனி வக்ஸ்கோல் - றோசாந்தினி, யூலிஹெரனி-ரவி, சமுத்திர ராஜ்-ரதினி, கஜன்ராஜ்-காயத்திரி, தமரா, மதுராஜினி-அஜந், நத்தனா, காலஞ் சென்ற கேராம் மற்றும் தஞ்சஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

லோட்டன் வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 30 50 33

(CR 39349) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் இல்லையெனின் மீனவர் அச்சுறுத்தல் ஏன்?

## வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரோடு இல்லை என்று கூறும் பாதுகாப்பு அமைச்சு எதற்காக மீனவர்களை அச்சுறுத்தும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது? இவ்வாறு தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை தொகுதி செயலாளரும் வேலணைப் பிரதேச சபை உறுப்பினருமான கருணாகரன் நாவலன் சபையில் கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என தமிழ்நாடு உலகத் தமிழ் பேரவையின் தலைவர் பழ.நெடுமாறன் அண்மையில் தெரிவித்திருந்தார். அவரின் கருத்துக்குப் பின்னர் தீவக கடலோரப் பகுதிகளில் கடற்படையினரால் பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அத்துடன் மீனவர்களை அச்சுறுத்தி துன்புறுத்தும் வகையிலும் அவர்கள் நடந்துகொள்கின்றனர்.

கடற்றொழிலுக்குச் செல்வதற்கு முன்பிருந்த அடையாள அட்டை பதிவு செய்யும் முறை மீளவும் நடைமுறைப்படுத்தப்பட்டு விசாரணைகளும் இடையூறுகளும் கடற்படையினரால் மேற்கொள்ளப்படுகின்றன என மீனவர்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

மீனவர்களுக்கு விளைவிக்கப்படும் இடையூறுகள் குறித்து கடற்றொழில் அமைச்சரும் கண்டுகொள்ளவில்லை. இந்தக் கெடுபிடிகளுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார்.

(ச)

## மகளிர் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்குப் போட்டிகள்

மன்னார், மார்ச் 3

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டச் செயலகம், மன்னார் மாவட்டப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறு போட்டிகளை ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் மற்றும் இலங்கை அகதிகளுக்கான புனர்வாழ்வு நிறுவனம் ஆகியவை மன்னார் மாவட்டச் செயலகத்துடன் இணைந்து இந்தப் போட்டிகளை ஏற்பாடு செய்து வருகின்றன.

அதற்கமைய தரம் 8 முதல் 10 வரையிலான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில் கவிதைப் போட்டிகளும், தரம் 11 முதல் 13 வரையிலான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில் கட்டுரை, ஓவியப் போட்டிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

போட்டிகள் சம்பந்தமான விதிமுறைகள் யாவும் சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தமது சுயவிவரத்துடன் ஆக்கங்களை மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கமுடியும் என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார். (ஒ-14-60)

## மகளிர் தினத்தை முன்னிட்டு யாழில் சிறப்புக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 3

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சுவடி நிறுவகத்தின் ஏற்பாட்டில் சிறப்புக் கண்காட்சி, யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி ராஜா கிறீம் ஹவுஸ் அருகாமையில் அமைந்துள்ள ஆர்க் கட்டடத்தில் நாளை சனிக்கிழமை, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை, 6ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை இடம்பெறவுள்ளது.

அத்துடன் கண்காட்சியின் இறுதிநாளான திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கும் பிற்பகல் 12.30 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மகளிர் தின நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

கண்காட்சியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த பெண்கள் அமைப்புக்களின் பாரம்பரிய உணவு உற்பத்திகள் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் எமது பிரதேசத்தில் காணப்படும் உணவாக உட்கொள்ளக்கூடிய அருகிவரும் தாவரங்களின் மீள் அறிமுகச் செயற்பாடும் நடைபெறவுள்ளது என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-14-66)

## இல்லமெய்வன்மைப்போட்டி

சாவகச்சேரி, மார்ச் 3

எழுதுமட்டுவாழ் சிறீகணேசா வித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.கண்டீபன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14-159)


நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

இன்றே பாவியுங்கள்,

சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMANCY.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி. : 021 222 2567
(குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(CR 39207)(3/6)



விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள இரண்டு மர அலுமாரியும் ஒரு ஸ்ரீல் அலுமாரியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 814 8150



உங்கள் நிலம் அறுதியாகபோகிறதா?

விரைவாக சொத்துக் கடனுக்கு அழையுங்கள்.

076-2488353



Face Clinic at Royal Medical Centre

ஆனது உங்கள் முகம், தாடைகள், தோல் மற்றும் கூந்தலுக்கு முழுமையான அறுவை சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை அல்லாத சிகிச்சையை வழங்குகின்றது.



- சிகிச்சையின் ஒவ்வொரு கட்டத்திலும் மிக உயர்ந்த தரமான கவனிப்பையும் பெறுவீர்கள்
- முகத்திலுள்ள தழும்புகள் நீக்கல்
- முகத்தோல் கட்டிகள் மற்றும் குறைபாடுகளை நீக்கல்
- முக மறுசீரமைப்பு சிகிச்சைகள்
- கண் மடல் சம்பந்தமான சிகிச்சைகள்
- வெளிக்காது மடல் அமைப்பு சீர் திருத்தம்
- கண்புருவம் சம்பந்தமான சத்திர சிகிச்சைகள்
- உதடு மற்றும் அண்ணப்பிளவு சீராக்கல்
- பல் நாட்டல் சிகிச்சைகள் - Dental Implant
- முகத்தோல் அழகுபடுத்தல் சிகிச்சை

சம்பந்தமான ஆலோசனை பெற முகம் தாடை சிறப்பு வைத்தியர் வருகை தருகிறார்

முன்பதிவுக்கு: 077 654 4731

றோயல் மெடிக்கல் சென்ரர்
458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு.இராமச்சந்திரன் டெனிஸ்ரன்
யா/ஊர்காவற்றுறை றோ.க.த.ஆ பாடசாலை

திருமதி மயூரதி டெனிஸ்ரன்
யா/கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்தியாலயம்

எமது பாடசாலை ஆசிரியரான திரு. இராமச்சந்திரன் டெனிஸ்ரன், அவரது துணைவி திருமதி மயூரதி டெனிஸ்ரன் ஆகியோர் கல்வி மாணிப் (B.Ed) பட்டத்தினை பெற்றமைக்காக இருவரையும் வாழ்த்துவதோடு, இருவரும் மென்மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர எம் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

Congratulations

பாடசாலைச் சமூகம்
யா/ஊர்காவற்றுறை றோ.க.த.
ஆண்கள் பாடசாலை.

(CS 23793)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MEGAKEM
CONSTRUCTION CHEMICALS

NOW IN JAFFNA

COLLABORATING WITH TK FLOORING & WATERPROOFING

Megakem Lanka (Pvt) Ltd, One of Sri Lanka's leading manufacturers of Construction chemical & member of the Wardena Venture Holdings Group, is opening their 3rd Sales Outlet in Jaffna on the 3rd of March 2023.
The showroom will be located at No. 210, Point Pedro Road, Anaippanthi, Jaffna, in collaboration with franchise distributor, TK Flooring and Water Proofing (Private) Limited, a leading waterproofing coatings applicator in the Northern region.

MEGAKEM PRODUCTS AND SERVICES

- Waterproofing Solutions
- Skim Coat & Tile Adhesives
- Concrete Repair & Crack Injection
- Grouting & Anchoring
- Industrial /Titanium Flooring
- Admixture for Concrete & mortar
- Joints Sealants & Joints Fillers
- Structural Strengthening
- Under Ground Construction
- Expansive Mortar Soundless Cracking Agent

JITF
Visit our Exhibition Stall @Jaffna International Trade Fair
Stall No: 116 & 117. On 3rd, 4th, 5th March, 2023



MEGAKEM SALES OUTLET - JAFFNA
TK FLOORING & WATERPROOFING (PVT) LTD.
No 210, Point Pedro Road, Anaippanthi, Jaffna., Sri Lanka.
P: +94 77 989 1412 | L: +94 21 437 3437
Email: tkconstruction@gmail.com

எதிர்கால வினைத்திறன்மிக்க
பொதியிடல் தொழில்நுட்ப நூதனத்தை
காண்பதற்கு நீங்கள் தயாரா?



நாம் உங்களது வர்த்தக நாமத்தை சர்வதேச
அரங்கிற்கு கொண்டுசெல்ல எமது பொதியிடல்
தொழில்நுட்ப நூதனத்தின் ஊடாக வழிகாட்டுவோம்

காட்சியறை இல: 89 தை பார்வையிட வாருங்கள்
முற்றவெளி மைதானம், யாழ்ப்பாணம்
Slick.lk

# ஒப்புரவாகி வாழ்வைப் புதுப்பிப்போம்



உங்கள் காணிக்கையைச் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள்மேல் ஏதேனும் மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவருடன் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்.




தொடர்பாடல்களும் மனிதாபிமானமும் கபடமற்ற அன்புறவும் எங்கெல்லாம் பாதிக்கப்படுகின்றதோ, அங்கெல்லாம் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய உன்னத நிலைப்பாட்டின் தன்மையை இயேசு விளக்குகின்றார். முழு மனித மாண்புக்கான வாழ்வின் நெறிமுறைகளைக் கற்றுக்கொடுக்கின்றார். மனித மனங்களின் நல்லுறவே மிகச் சிறந்த வழிபாடு. எதிரியோடு விரைவில் சமாதான உடன்பாடு செய்வது மன அழுதத்தங்களையும் வீண் செலவீனங்களையும் நீக்கி உற்சாகத்தையும் மன அமைதியையும் கொடுக்கும். இவையெல்லாம் மனித நல்லுறவை மையப்படுத்தும் நெறிமுறைகள். உறவுகள்தான் மனித வாழ்க்கை என்னும் வாகனத்தை மகிழ்வோடு ஓட்டிச்செல்ல உதவும் சக்கரங்கள். நிறைவான, மகிழ்வான வாழ்வுக்கு அடுத்து வாழும் மனிதரோடு ஒப்புரவாகி உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இதனைக் கடைப்பிடிக்காத எந்த இறைமனித உறவு முயற்சியும், செயற்பாடும் இறை தர்மம் ஆகாது. கடவுளோடும் அயலவரோடும் ஒப்புரவாவோம். அன்புறவோடு தவக்காலத்தை அனுசரித்த வாழ்வைப் புதுப்பித்துக் கொள்வோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.



**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்.



**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். அனுகூலம் உண்டாகும்.



**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். புதிய நண்பர்களின் அறிமுகமும் ஆதாயமும் கிடைக்கும். ஆதாயம் உண்டு.



**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவ னம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



**கன்னி:** உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.



**துலாம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்பு நீங்கும்.



**விருச்சிகம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுக ளால் கடன் வாங்கவும் நேரிடும். பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது ஆறுதலாக இருக்கும்.



**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். வியாபாரத்தில் பணியாளர்களைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்கவும்.



**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.



**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆதாயம் கிடைக்கும்.



**மீனம்:** புதிய முயற்சிளைப் தொடங்குவது நல்லது. உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீண்டும்...

காகச் சென்ற மூன்று மீனவர்களின் வலைகள் இந்திய இழுவைப் படகுகளால் அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ளன என்று சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய இழுவைமடிப் படகுகளின் அத்துமீறல் மீன்பிடி நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. நேற்றும் (நேற்றுமுன்தினமும்) எமது மூன்று மீனவர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளால் அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ளன. இந்திய மீனவர்களின் இவ்வாறான அத்துமீறல் நடவடிக்கைகள் தொடர்பாக நாம் பல்வேறு முறைப்பாடுகளைப் பதிவுசெய்துள்ளோம். எனினும் எந்தப் பயனும் இல்லை - என்றார். (அ-ம-125,20)

### இந்திய...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாயத்தக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த பொலிஸாரின் சிவில் பாதுகாப்புக் குழுக்களைப் பலப்படுத்தி பிரதேச ரீதியாக நடவடிக்கை எடுப்பது என்றும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது. (அ-ம)

### வர்த்தகக்...

இன்று, நாளை, நாளைமறுதினம் என்று மூன்று தினங்கள் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது. 13ஆவது தடவையாக இந்தக் கண்காட்சி இடம்பெறுகின்றது. கொழும்பின் பிரபல நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களுடன் இணைந்து இந்த வர்த்தகக் கண்காட்சி முன்னெடுக்கப்படவுள்ளது. தொழில் முயற்சியாளர்களுக்கான ஆகச்சிறந்த சந்தை வாய்ப்பாக இந்தக் கண்காட்சி கருதப்படுகின்றது. இந்தக் கண்காட்சியைப் பார்ப்பதற்காக சுமார் பல்லாயிரக்கணக்கானோர் வருவார்கள் எனக் கருதப்படுகின்றது. (அ-ம)

## மரண அறிவித்தல்

### திருமதி யூலியற் ஜெயசீலி பெனடிக்ற்

(லைடன் ரெக்ஷ்ரைல்ஸ் உரிமையாளரின் மனைவி)

தோற்றம் 16.03.1945 மறைவு 02.03.2023



கரம்பன் கிழக்கு, ஊர்காவற்துறையை பிறப்பிடமாகவும், சுவாட்ஸ் லேன், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யூலியற் ஜெயசீலிபெனடிக்ற் நேற்று (02.03.2023) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின பூதவுடல் வைற் ஹவுஸ் (White House மலர்ச்சாலையில் (இல 180, பிரதான வீதி, யாழ்ப்பாணம்) அஞ்சலிக்காக காலை 8.00 மணி முதல் மாலை 05.00 மணிவரை வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

27, சுவாட்ஸ் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: மகன்
1) பீற்றர் ஜெயக்குமார்
077 148 4546, 0061412215286
2) அன்ரனி ஜெயந்திரன்
076 6737 262, 00447956449827

(CS 23800)1-6

## மரண அறிவித்தல்

### பாலசுப்பிரமணியம் நாகராஜ்



பிறப்பு 20.12.1975 இறப்பு 02.03.2023


ஆலடி ஒழுங்கை, ஊரெழு மேற்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் நாகராஜ் நேற்று (02.03.2023) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கமலாவதி - பாலசுப்பிரமணியம் தம்பதியரின் புதல்வனும், அமரர் கனகரத்தினம் மற்றும் சோதிமலர் தம்பதியரின் மருமகனும், விஜிதாவின் கணவரும், பத்மதர்சினி (நியூசிலாந்து) இன் சகோதரனும், வரதராஜன் (நியூசிலாந்து), பிரபாகரன், பகீதரன் (கனடா), பாஸ்கரன் (கொழும்பு), பிரேமிளா (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், ஹரிஷ், விதுசா, சேயோண் (நியூசிலாந்து, ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 - 1.00 மணிவரை அவரது இல்லத்தில் இடம்பெற்று,, தகனக்கிரியைக்காக பூதவுடல் பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 0077 31

## மரண அறிவித்தல்



### சதாசிவம் இராமலிங்கம்

சப்பச்சி மாவடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மடத்தடி மேற்கு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் இராமலிங்கம் அவர்கள் நேற்று (02.03.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம், செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தம்பி- இராசம்மா தம்பதியரின் மருமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், சிவக்கொழுந்து, காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், சரஸ்வதி மற்றும் திலகவதி, சந்திரவதனி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதாஜினி, நிமாலினி, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜிதன், செல்வகுமாரன், அன்பழகன், மதியழகன், பாலவதனி விஜியழகன், நிசாந்தினி, புனிதராசா, புனிதநந்தினி, ஜீவநந்தினி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுமதியின் பெரியப்பாவும், தக்ஷன், தக்ஷி, சானுஜன், ஆருஷன், ஆத்மிகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.03.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மடத்தடி, 1ஆம் மைல் வீதி, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.

(CR 39369) 1-6

## மரண அறிவித்தல்

மண்ணுலகில் 24 . 11 . 1945



விண்ணுலகில் 02 . 03 . 2023

### நடராசா கணேசானந்தன்

யாழ்ப்பாணம் சிராம்பியடியை பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கு சூராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கணேசானந்தன் அவர்கள் நேற்று (02.03.2023) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - மாணிக்கம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாநாயகம் - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், புஷ்பராணியின் அன்புக் கணவரும், உதயகுமார், தனுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹம்ஷா, சுஜாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் கமலேஸ்வரி, பேரின்பநாயகம் (சிவா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான இந்திராவதி, குணபாலசிங்கம் மற்றும் சந்தானலட்சுமி (சாந்தா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிறேமராணி - இம்மானுவேல், குணரட்ணம்- கோமதி, ராஜரட்ணம் - விமலாவதி (நந்தினி), தவரட்ணம் - அருநந்திதேவி (வசந்தா), பாலராணி - ஜெகன்மோகன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ருத்ரேஷ், ஷாத்விக், சகினா, திஷானிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"இராச சபா" சூராவத்தை, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.

(CR 39349) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தமானியில்...

அரசு நிதி விடுவிக்காமையால் மார்ச் 9ஆம் தேர்தலை நடத்தமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே ஊடக அறிக்கை ஊடாக அறிவித்திருந்தது. இது சட்டரீதியான ஒன்று அல்ல என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனவே சட்டரீதியான அறிவிப்பை விடுக்கும் நோக்குடன் 25 மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுடனும் ஆணைக்குழு ஆராய்ந்தது. உரிய காரணங்களை வெளிப்படுத்தாமல் தேர்தல் ஒத்திவைப்பு வர்த்தமானி அறிவித்தலில் கையெழுத்திட தெரிவத்தாட்சி அலுவலர்கள் மறுத்துவிட்டனர். இதனால் வர்த்தமானி வெளியிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (அ-ஒ,5)

## ரூபாவின்...

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக உயர்வடைந்து வருகின்றது. இந்த நிலையில் நேற்றுமுன்தினத்தைவிடவும் நேற்று ரூபாவின் பெறுமதி மேலும் உயர்வடைந்துள்ளது. இதன்படி நேற்று அமெரிக்க டொலர் ஒன்றுக்கான கொள்வனவுப் பெறுமதி 343.97 ரூபாவாகவும், அதன் விற்பனைப் பெறுமதி 356.73 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றுக்கான கொள்வனவுப் பெறுமதி 351.72 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 362.95 ரூபாவாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## மே மாத...

பெறும் என்று வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது. நிதி விடுவிப்பதில் ஏற்பட்ட தடங்கலால் அன்றையதினம் தேர்தல் நடைபெறாது என்றும் இன்றையதினம் புதிய திகதி அறிவிக்கப்படும் என்றும் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

அதற்கமைவாக ஆணைக்குழு இன்று கூடுகின்றது. இதன்போது மே மாத இறுதி வாரத்தின் தொடக்க நாளில் தேர்தல் நடத்தப்படும் என்று ஆணைக்குழு அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏப்ரல் மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் நிதி விடுவிக்கப்பட்டாலே தேர்தலை மே இறுதி வாரத்தில் நடத்தலாம் என்றும் ஆணைக்குழு அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ஒ,5)

## அத்துமீறிய...

விட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர்மலைப் பகுதியில் நீதிமன்றக் கட்டளைகளை மீறி இடம்பெற்றுவரும் கட்டுமானப் பணிகள் தொடர்பில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் ஏற்கனவே இருந்த வழக்கு நகர்த்தல் பத்திரம் அணைத்து நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் வடமாகாணசபை முன்னாள் விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் சமூகச் செயற்பாட்டாளர் ஞா.யூட் பிரசாந்த் ஆகியோர் வழக்குத் தொடுநர்கள் சார்பில் முன்னிலையாகினர். இவர்கள் சார்பாக சட்டத்தரணிகளான வி.எஸ். தனஞ்சயன், சுபா விதுரன், ருஜிக்க நித்தியானந்தராஜா உள்ளிட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் சட்டத்தரணிகள் ஆறு பேர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

சட்டத்தரணிகள் முன்வைத்த விடயங்களைக் கேட்ட நீதிபதி, முல்லைத்தீவு - குருந்தூர்மலைப் பகுதியில் நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் நீதிமன்ற அவதானிப்புக்களுக்கு முரணாக அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் தொடர்பில் அறிக்கையிடுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோருக்கு உத்தரவிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் வழக்குத் தொடுநர்கள் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி வி.எஸ்.தனஞ்சயன் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலை வழக்கில் நகர்த்தல் பத்திரம் அணைத்து நீதிமன்றத்துக்குச் சமர்ப்பணம் செய்துள்ளோம். ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் இது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த வழக்கில் நீதிமன்றமானது மூன்று திகதிகளில் கட்டளையை வழங்கியுள்ளது. இறுதியாக கடந்த நவம்பர் மாதம் 24ஆம் திகதியன்று கட்டளையொன்றை வழங்கியது. அதில், 'ஜூன் மாதம் 12ஆம் திகதியன்று ஆலயச் சூழல் கட்டுமானங்கள் எவ்வாறு இருந்ததோ அந்தக் கட்டுமானங்கள் அவ்வாறே இருக்கவேண்டும். மேலதிகமாக கட்டுமானங்கள் எவையும் இடம்பெறக்கூடாது' என்று உத்தரவிட்டது. அந்தக் கட்டளையை மீறி தொடர்ச்சியாக தொல்பொருள் திணைக்களத்தாலும், குறித்த விகாரையைச் சார்ந்த விகாராதிபதியாலும் பொலிஸாரினதும் இராணுவத்தினரதும் ஒத்துழைப்புடன் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால், நீதிமன்றத்தின் உத்தரவு அப்பட்டமாக மீறப்படுகின்றமை தொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளோம். நீதிமன்றத்தின் கட்டளையை மீறும் வகையில் தொடர்ச்சியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற செயற்பாடானது நீதிமன்றத்தில் பொதுமக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையைப் பாதிக்கும் செயற்பாடாக இருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளோம். இந்த வழக்கு எதிர்வரும் 30ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படவுள்ளது - என்றார். (அ-ம)

## கழிவு நீர்...

பட்ட 108 ஏக்கர் காணிகளில் உள்ள பெரும்பாலான கிணறுகள் உபயோகிக்க முடியாத நிலைமையில் உள்ளன என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். மலக்கழிவுகள் உள்ளிட்ட கழிவுகளை இராணுவத்தினர் வெளியேற்றாமல் அங்கிருந்து சென்றதாலேயே இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு வலி.வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த 108 ஏக்கர் காணிகள் அண்மையில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன. அந்தக் காணிகளில் குடியமர்வதற்கான நடவடிக்கைகள் காணிகளின் உரிமையாளர்களால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அந்தப் பகுதியில் உள்ள பெரும்பாலான கிணறுகளின் நீர் உபயோகிக்க முடியாத அளவுக்கு மாசடைந்திருப்பதால் மீள்குடியமர்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இராணுவத்தினர் அந்தப் பகுதியை உபயோகித்தபோது கிணறுகளுக்கு அருகில் மலக்கழிவுகளை வெளியேற்றும் தொட்டிகளையும், கழிவு நீரை வெளியேற்றும் தொட்டிகளையும் அமைத்திருந்தனர். அவற்றில் உள்ள கழிவுகளை அகற்றாமலேயே படையினர் வெளியேறியுள்ளனர். இதனால் அந்தக் கழிவுநீர் கிணற்று நீருடன் கலந்து கிணற்று நீரை அசுத்தமாக்கி வருகின்றது. இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அத்துடன், இராணுவத்தினரோ அல்லது உரிய அதிகாரிகளோ இந்த இடர் நிலையைச் சீர்செய்து தரவேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை- இதுகுறித்த முறைப்பாடுகள் தனக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், விரைவில் இந்தக் கழிவுத் தொட்டிகளை அகற்றி தீர்வு காணும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்துள்ளார். (ம-26)

## தகுதியுடைய...

கெடுப்பை முன்னெடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படவுள்ளன என்று ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தச் செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலின் கீழ் முன்னெடுக்கப்படும் நலன்புரி நன்மைகள் வழங்கும் திட்டத்துக்குத் தகுதியானவர்களைக் கண்டறியும் வகையில், தரவுகளை ஆராய்வதற்கான தரவு திரட்டல் நடவடிக்கை தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்தப் பணிகள் மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. உரிய திகதிக்கு முன்னர் தரவை வழங்க முடியாத விண்ணப்பதாரர்கள் நலன்புரித் திட்டங்களை இழக்க நேரிடும்.

நலன்புரி நன்மைகளை வழங்குவதற்காக தகுதியானவர்களை அடையாளம் காணும் திட்டத்தின் கீழ், தகவல்களை ஆய்வு செய்வதற்காக தரவுகளை சேகரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளகள அதிகாரிகளுக்குத் துல்லியமான தரவை துரிதமாக வழங்குமாறு அனைத்து விண்ணப்பதாரிகளும் கோரப்படுகின்றனர்.

'உண்மையைச் சொல்வோம் சரியானவர்களுக்கு நன்மைகளை வழங்குவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் செயற்படுத்தப்படும் தரவு சேகரிப்புப் பணிகள் நிறைவடைந்ததும் சரியான தரவுகளை வழங்கியதற்காக அறிவிப்பில் விண்ணப்பதாரிகள் கையொப்பமிடப்படவேண்டும். மேலும் ஒவ்வொரு வீட்டுக்கும் 'கியூ.ஆர்.' குறியீடு வழங்கப்பட இருப்பதோடு இந்த 'கியூ.ஆர்.' குறியீட்டைப் பயன்படுத்தி தாம் வழங்கிய தரவின் சுருக்கத்தை பார்வையிடமுடியும் என்றுள்ளது. (அ-ம)

## ஆசிரியரின்...

தருமபுரம் பகுதியிலுள்ள பிரபல பாடசாலையொன்றில், ஆசிரியர் மோசமாகத் தாக்கியதை அடுத்து மாணவன் ஒருவரின் கால் தசை கிழிந்துள்ளது.

பாடசாலை மைதானத்தில் விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு இடம்பெற்ற பயிற்சியின்போது, மைதானத்தில் உள்ள சுவட்டுப் பாதைக்கு குறுக்காகச் சென்றமையாலேயே 13 வயதான மேற்படி மாணவன் மீது இந்தக் கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆசிரியருக்கு எதிராக முறைப்பாடு வழங்கச் சென்றபோது, முறைப்பாட்டை ஏற்பதற்கு பொலிஸார் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடுவதற்கும் சிறுவனின் பெற்றோர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்று தெரியவருகின்றது. விடயம் தொடர்பில் உறுதிப்படுத்துவதற்காக பாடசாலையின் அதிபரைத் தொடர்புகொண்டபோது அவர் அழைப்புக்குப் பதில் தரவில்லை. (அ-ம)

## மருமகன்...

மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமியார் உயிரிழந்துள்ளார். அவரின் மகள் (சந்தேகநபரின் மனைவி) படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வவுனியா, பெரிய உலுக்குளம் பகுதியில் நேற்றுக் காலை இந்தக் கொடூரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மனைவிக்கும் கணவனுக்கும் (சந்தேகநபருக்கும்) இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் முற்றிய நிலையில், மனைவி மீது கணவன் கண்மூடித்தனமான தாக்குதலை முன்னெடுத்துள்ளார். வீட்டிலிருந்த கத்தி மற்றும் கோடரியைக் கொண்டு அவர் தாக்குதலை முன்னெடுத்தார் என்று தெரியவருகின்றது. இதைத்தடுக்கச் சென்ற மாமியார் மீதும் சந்தேகநபர் தாக்குதலை முன்னெடுத்துள்ளார். இதனால் தலையில் படுகாயமடைந்த மாமியார் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார். டி.அமராவதி (வயது -60) என்ற நபரே உயிரிழந்தவராவார். அவரின் மகளான துலிகா ரத்தினசிறி (வயது -37) படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதலை முன்னெடுத்த நபரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பாக மாவட்ட தடயவியல் பொலிஸார் மற்றும் உலுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-110)

## யாழ். பல்கலையில்...

காணும் நோக்குடனும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பட்டதாரிகளுக்கான நிரந்தரமான மற்றும் தற்காலிக, முழுநேர மற்றும் பகுதிநேர வேலை வாய்ப்புக்களுக்கான வாய்ப்புக்களை அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொடுக்கும் இலக்குடனும் கலைப்பீடத்தில் முதற்றடவையாக இன்று தொழிற்சந்தை நடைபெறவுள்ளது.

நாடளாவியரீதியில் 85க்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்கும் இந்தத் தொழிற்சந்தையில் அமைச்சுகள், அரச திணைக்களங்கள், சபைகள், தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள், விருந்தோம்பல் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள், ஹோட்டல்கள், உயர்கல்வி நிறுவனங்கள், தனியார் பாடசாலைகள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்றுறையினர் எனப் பல தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொழிற்சந்தையின் தொடக்க விழாவில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார். காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில், கலைப்பீடத்தில் நான்காம் வருடம் மற்றும் மூன்றாம் வருட சிறப்புக் கலை மற்றும் பொதுக்கலை பயிலும் மாணவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறப்புக்கலை, பொதுக் கலைப் பட்டங்கள் பெற்று, வேலை வாய்ப்புக்களுக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகளும் நேரடிப் பயனாளிகளாக இணைந்துகொள்ளவுள்ளனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளகப்...

அறிக்கையிட்டதன் ஊடாக அவர்கள் மீதிருந்த கொஞ்ச நம்பிக்கையும் இழக்கப்பட்டுள்ளது - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகிய வற்றின் பிரதிநிதிகள் 'உதயன் பத்திரிகையிடம்' தெரிவித்தனர்.

'பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதில் சர்வதேச பொறிமுறையொன்றை ஆதரிக்கும் தரப்பினர், அரசாங்கத்தின் எத்தகைய கட்டுப்பாடுமின்றி பாதிக்கப்பட்ட தரப்பினரின் பிரதிநிதித்துவத்துடன் செயற்றிறன் மிக்க, நேர்மையான உறுப்பினர்களை உள்ளடக்கி நிறுவப்படக்கூடிய உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு என்ற உள்ளகப்பொறிமுறைக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்' என்று வடக்குப் பயணம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ள அறிக்கையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

**உள்ளகப் பொறிமுறையென்ற பேச்சுக்கே இடம் கிடையாது**

ஆணைக்குழுவின் இந்த அறிக்கையிடல் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் குறிப்பிடுகையில்; ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தூதுக்குழுவாகத்தான் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் வடக்குக்கு வருகை தந்தார்கள். அவர்கள் இங்கு சிலரைச் சந்தித்தார்கள். அவர்களை மூளைச்சலவை செய்துள்ளார்கள். எமது மக்கள் - பாதிக்கப்பட்டவர்கள் ஒருபோதும் இலங்கையின் உள்ளக விசாரணைக்கு இணங்கமாட்டார்கள். இந்த ஆணைக்குழு பொய்யான அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. சர்வதேச சமூகத்துக்கு பச்சைப் பொய்யைச் சொல்லி ஏமாற்றப்பார்க்கின்றார்கள். ரணில் விக்கிரமசிங்கவைப்பற்றி தெரிந்தவர்களுக்கு அவரது கபடங்களைப் பற்றியும் தெரியும். அதிலொன்றுதான் இந்த ஆணைக்குழுவின் கபட அறிக்கையும். நாம் போர் முடிந்ததிலிருந்து உண்மை கண்டறியப்படவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம். அது சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடனேயே செய்யப்படவேண்டும். அதில் எந்தவொரு மாற்றமும் இல்லை - என்

**குற்றம் இழைத்தவர்களே விசாரணை செய்யமுடியாது**

ஜனநாயகதமிழ்த்தேசியக்கூட்டணியின் பங்காளிக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக தெரிவிக்கையில்; உள்ளகப் பொறிமுறையை ஏற்றுக்கொள்கின்றோம் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குச் சொன்னவர்கள் யார் என்று எங்களுக்குத் தெரியாது. வடக்கு தமிழ் மக்கள் என்று ஆணைக்குழு மொட்டையாகச் சொல்லியிருக்கின்றது. அவர்கள் தங்களுக்கு இவ்வாறு சொன்னவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தவேண்டும். தமிழ் மக்கள் தங்களின் பிரதிநிதிகளாகச் சிலரை தெரிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் ஒருபோதும் இப்படியொரு கருத்தை முன்வைக்கமாட்டார்கள். அவர்கள் கடந்த காலங்களில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குக்கூட சர்வதேச விசாரணையைக் கோரித்தான் கடிதம் அனுப்பியிருந்தார்கள். எனவே, இவ்வாறான உள்ளகப்பொறிமுறையை ஏற்றுக்கொண்டவர்களை ஆணைக்குழு வெளிப்படுத்தவேண்டும். அவ்வாறு இல்லையெனில் இதனை வடக்கு மக்கள் சார்பான அறிக்கையாக ஒருபோதும் சொல்லக்கூடாது.

எம்மைப்பொறுத்தவரையில்குற்றமிழைத்தவர்களே விசாரணையைச் செய்யமுடியாது. ஆதனால்தான் சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம். உள்ளகப் பொறிமுறை ஊடாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்காது. சர்வதேசப் பொறிமுறை ஊடாகத்தான் நீதி கிடைக்கும். உள்ளகப் பொறிமுறை ஊடாக உருவாக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரைக்கூட கண்டுபிடிப்பதற்கான ஆணை இல்லை. அதனைவிட அந்த அலுவலகத்தை காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்கள் கூட நிராகரித்துள்ளனர். இவ்வாறான தொரு லட்சணத்தில் வடக்கு தமிழ் மக்கள் உள்ளகப் பொறிமுறையை கோருகின்றனர் என்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருத்து நகைப்புக்கிடமானது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இவ்வாறு சொல்வதன் ஊடாக உண்மையை மூடி மறைக்கின்றது. இவ்வாறு செய்வதன் ஊடாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீதுதான் நம்பிக்கையீனம் ஏற்படும் - என்றார்.

**மனித உரிமைகள் ஆ.குழு அப்பட்டமாக பொய்யுரைப்பு**

இந்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிடுகையில்; இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை அப்பட்டமான பொய். அந்த ஆணைக்குழு மீது இருந்த அதிகுறைந்த நம்பிக்கையையும் இழந்துவிட்டமையைத்தான் இந்தச் செய்தி வெளிப்படுத்துகின்றது. பொறுப்புக்கூறல் சம்பந்தமாக ஒருபோதும் உள்ளகப் பொறிமுறையை ஏற்றுக்கொள்ளமுடியாது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் வடக்கில் நடத்திய கலந்துரையாடல் ஒன்றில் எமது கட்சி பங்கேற்றிருந்தது. அந்தக் கூட்டத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உள்ளகப் பொறிமுறைக்கு ஆதரவான கருத்து எவராலும் முன்வைக்கப்படவில்லை. அதேவேளை எமது கட்சி கலந்துகொள்ளாத ஏனைய கூட்டங்களிலும் இவ்வாறானதொரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை நாங்கள் நம்பகரமாக அறிந்திருக்கின்றோம். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வடக்கு மக்கள் இவ்வாறு சொல்லியதாகத் தெரிவித்து வெளியிட்ட அறிக்கை அப்பட்டமான பொய்யே - என்றார்.

(அ-ஓ.5)


## காணியுடன் வீடு விற்பனைக்குண்டு

இல.246, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியில் 4 பரப்புக் காணியுடன் மேல் மாடி வீடு விற்பனைக்குண்டு. கீழ் தளத்தில் 3 அறைகள், இணைந்த குளியலறை, வரவேற்பறை, சமையலறை, வாகனத்தரிப்பிடம், மேல் தளத்தில் 2 அறைகள், வரவேற்பறை என்பவற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 492 7359
whatsapp: +447 495 619 963



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா மட்டும்.
- 02 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 46 50 171, 076 911 9371



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 19 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரத்தில்.
- புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 KM தூரம்.
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காப்பெற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வீதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 4350 614, 077 6385 683



## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 01 . 1950



இறப்பு 02 . 03 . 2023

### செல்வி இராஜேஸ்வரி ஏரம்பு

**(ஓய்வுபெற்ற கணக்குப் பதியுனர் (Book Keeper) வலயக்கல்வி அலுவலகம் - மருதனார்மடம்)**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராஜேஸ்வரி ஏரம்பு நேற்று (02.03.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு கனகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நடராஜா, தெய்வேந்திரம், அகிலாண்டேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திராவதி (கனடா), விமலாவதி - காலஞ்சென்ற தவசோதிலிங்கம், பாலசுப்பிரமணியம், மாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தாயாரும், சகிலன் - நித்தியா (கனடா) வின் பேர்த்தியாரும், மாதுளன், கவினா, கிறிஸ்ரி (கனடா), அபிராமி, அகலியா (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

T.P:021 22 20 223
H.P:077 97 89 672
10/5, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
பெறாமக்கள் T.விமலாவதி (குட்டி)
இந்திரவதி (சாந்தா)
பாலசுப்பிரமணியம்.



## காணவில்லை



பூதர்மட வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த **லோகேஸ்வரன் சுதர்ஜனன் (வயது - 23)** என்பவர் **கடந்த புதன்கிழமை (22.02.2023) நீர்வேலியிலிருந்து யாழ்நகருக்கு வந்தவர்** மீண்டும் திரும்ப வரவில்லை. இவரைக் கண்டவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையம் / பின்வரும் தொடர்பு இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 833 2311, 077 280 4948, 077 013 1924


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.